1992 பிப்ரவரி 4]

திரு. கு. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றத்தில் ஆளுநர் அளித்த உரையின்மீது கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களை அளிக்கும் வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, நம் தமிழகத்தினுடைய ஏழை, எளிய மக்களுக்காக நல்ல பல திட்டங்களை ஆற்றிட வேண்டும் என்பதற்காக, இன்றைக்கு ஆளுநர் அவர்களின் வாயிலாக இந்தப் பேரவையிலே நல்ல ஒரு உரையை உவந்தளித்திருக்கிறார்கள். இதன்மீது கருத்துக்களை அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும், நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்களும், அனைத்து . . .

7. விதி 110-ன் கீழ் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

பி. & சி. ஆலை திறப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள், பேரவை விதி 110-இன்கீழ் ஒரு அறிவிப்பை, பேரவைக்கு அளிக்க அனுமதி கேட்டுள்ளார். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இப்போது, அதை அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே நடந்து கொண்டிருந்த பி. அண்ட் சி. மில் மூடப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். அதுகுறித்து பல நாட்களாக பேச்சுவார்த்தை நடைபெற்று, நல்ல முடிவு ஏற்படாமல் இருந்து வந்தது. இன்றையதினம், அரசியல் கட்சிகளுடைய வேண்டுகோளுக்கிணங்க அரசியல் கட்சித் தலைவர்களும், தொழிற்சங்கத் தலைவர்களும், பின்னி மில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், பின்னி மில் நிர்வாகத்தினுடைய பிரதிநிதிகளும் ஆகிய அனைவரும் உட்கார்ந்து பரிசீலனை செய்து, ஒரு நல்ல முடிவை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எடுத்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி).

அதன்படி, வருகிற தமிழ்ப் புத்தாண்டின் முதல் நாள் ஏப்ரல் 13 ஆம் தேதி, பி அண்டு சி மில் திறக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

தொழிலாளர் சார்பில் அதனுடைய தொழிற்சங்கத் தலைவர் திரு. டபிள்யூ. ஆர். வரதார்ஜன் அவர்களும், நிர்வாகத்தின் சார்பில் திரு. வெங்கட்ராமன் அவர்களும், அரசின் சார்பில், தொழிலாளர் நலத்துறை ஆணையர் திரு. ஆதிமூலம் அவர்களும் அடங்கிய ஒரு முத்தரப்புக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. இனி அந்தக் குழு, இந்த பி அண்டு சி ஆலையைத் திறந்து நடத்துவதற்கான பணியிலே ஈடுபட்டு, அதை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிவசுப்பிரமணியன் நாளை தொடர்ந்து பேசுவார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5—2—1992) காலை 9 30 மணிக்குக் கூடும் வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

45. எரிசக்தி சேமிப்பு கருவிகள் விற்கப்படும் வியாபாரியால் செலுத்த வேண்டிய வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—4—1991-ம் நாளிட்ட 189 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் எண் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

46. பட்டமடை, திருவாளர்கள் சுவாமி சிவானந்தா நூற்றாண்டு அறக்கட்டளை மருத்துவமனைக்கு விற்பனை செய்யப்படும் பொருட்களுக்காக செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய